Tamil Election Switzerland
DEMOCRACY, TRANSPARENCY AND FAIRNESS

Zürich, 28.03.20107

# ஊடகச்செய்தி

## சுவிஸ் ஈழத்தமிழரவை உதயமாகிவிட்டது!!

சுவிஸ் தழுவிய ரீதியில் நடைபெற்ற ஈழத்தமிழரவைக்கான தேர்தல் இன்று ஞாயிறு 28.03.2010 18மணியுடன் முடிவடைந்துள்ளது. சுவிசின் 17 மாநிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இவ்வாக்கெடுப்பில் கணிசமான மக்கள் கலந்து கொண்டு சுவிஸ் ஈழத்தமிழரவைக்கான தமது பிரதிநிதிகளை தேர்ந்துள்ளனர்.

ஈழத்தமிழரவைக்கான தேர்தலில் தெரியப்பட்டுள்ள 30 பிரதிநிதிகளில் 14 இளைய தலைமுறையினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் 6 பெண்பிரதிநிதிகளும் அடங்குவர். அத்துடன் தமிழர் அல்லாத இரு சுவிஸ்நாட்டு பிரஜைகளும் இத்தேர்தலில் பங்கு பற்றி தெரியப்பட்டுள்ளனர். ஈழத்தமிழரவைக்கான போட்டியில் சுவிஸ்நாடு பூராவும் 41 வேட்பாளர்கள் பங்கு பற்றி இருந்தனர்.

இத்தேர்தலின் பின்னணியில் சுவிசின் பிரதான கட்சிகளின் பிரமுகர்கள் தம்மை இணைத்துக் கொண்டததுடன் சிலர் வாக்குச்சாவடிகளை பார்வையிட்டு தமது கருத்துக்களையும் பகிர்ந்துள்ளனர். அந்த வகையில் சுதந்திர ஜனநாயக கட்சியின் சூறிச் மாநகரசபை உறுப்பினர் திரு ஊர்ஸ் எக்கர் தேர்தல் நடைமுறைசார்ந்து குறிப்பிடுகையில் இவ்வாக்கெடுப்பானது நேர்த்தியான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதையிட்டு தனது வாழ்த்துக்களையும் எதிர்காலத்தில் தமிழர்களின் இந்த முயற்சி ஆரோக்கியமான திசையில் செல்லும் எனவும் கூறி இருந்தார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியும் சுவிஸ் தேர்தல் கண்காணிப்பாளர்களின் பூரண கவனிப்பில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனூடாக தேர்தல் ஒழுங்கு முறைகளிற்கு இசைவாக அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளும் தேர்தல் நடைமுறைகளின் சீரான ஒழுங்கமைப்பு சார்ந்து வாழ்த்துரைத்துள்ளனர்.

சுவிசில் தமிழர்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார மற்றும் சமூகவியல் இணைவாக்கத்திற்கு ஈழத்தமிழரவையின் உதயம் நல்லதொரு அத்திவாரமென கருதப்படுகின்றது. எதிர்காலத்தில் சுவிஸ் தமிழர்களின் ஜனநாயக குரலாக ஒலிக்கவுள்ள ஈழத்தமிழரவையானது இச்செயற்திட்டத்தினூடாக சுவிசின் சகல மட்டங்களிலும் செயலாற்ற முடியும் என்பது திண்ணம்.

மிக விரைவில் சுவிஸ் ஈழத்தமிழரவையின் முதலாவது அமர்வு சார்ந்த தகவல்கள் வெளியாகும் என்பதை இத்தருணம் அறியத் தருகின்றோம்.

**Swiss Tamil Diaspora, C/O Tamil Election Switzerland, Postfach 1511, 8021 Zürich**

info@tamilelection.ch

சுவிஸ் தேர்தல் குழு

(இது பல தமிழ் அமைப்புக்களின் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாகும்)